**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.01/2018 –** P.W.1

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திருமதி. ஜெயந்தி | Husband Name. பாஸ்கர் |
| Village : தூத்துக்குடி | Age: 62 |
| Date : 20.08.2026 | தொழில் : வீட்டுக்குடித்தனம் |

நம்பர்: 9626071024

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of August 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamakeswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of August 2026.**

Signature of Interpreter

**( 1, 2ம் எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக அவர்களது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச.பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு மறு விசாரணை**.

தூத்துக்குடி மாவட்டம், புளியம்பட்டி அந்தோனியார் காவல் நிலையத்திற்கு இந்த வழக்கின் சம்பவத்திற்கு முன்பாக எதிரிகள், நான் எனது மகள் மற்றும் மகளின் குழந்தை ஆகியோர்கள் என்ன விசாரணைக்காக சென்றிருந்தோம் என்றால் எனது மகளுக்கும் எதிரிகளுக்கும் என்ன பழக்கம் என்று எனக்கு

தெரியாது, என்னுடன் வா உனக்கு வேலை வாங்கி தருகிறேன் என எதிரிகள் சொல்லி எனது மகளை எங்கள் ஊரிலிருந்து வேளாங்கண்ணிக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். அங்கு எதிரிகள் குழந்தையை வைத்துக்கொண்ட நிலையில் எனது மகள் வேலைக்கு சென்றுவந்தால், அதன் பின்னர் 10 நாட்கள் கழித்து குழந்தையின்றி எனது மகள் மட்டும் தனியாக வீட்டிற்கு வந்திருந்தால், நான் குழந்தை எங்கே என்று கேட்டேன், எனது மகள் குழந்தையை எதிரிகளிடம் வழங்கியதாகவும், இன்னும் நிரைய கதைகளையும் சொன்னார். அதற்காக புளியம்பட்டி அந்தோனியார் காவல் நிலையத்திற்கு சென்றோம். பின்னர் குழந்தையை எல்லாம் எடுத்துக்கொண்டு நாங்கள் வீட்டிற்கு வந்துவிட்டோம். அதன் பின்னிட்டு மீண்டும் எனது மகள் குழந்தையை எடுத்துக்கொண்டு வேலைக்கு போவதாக சென்றுவிட்டார். அதன் பின்னிட்டு எனது மகள் குழந்தையுடன் எதிரிகளுடன் சேர்ந்து மதுரை மாட்டுத்தாவனியில் இருந்து கோயம்புத்தூர் சென்றுவிட்டார், அதன் பின்னிட்டு நானும் எனது கணவரும் எனது மகளையும் குழந்தையையும் தேடிக்கொண்டு வேளாங்கண்ணி வந்தோம், அங்கு அவர்கள் இல்லை. கோயம்புத்தூருக்கு சென்றுவிட்டதாக அங்கிருந்தவர்கள் சொன்னார்கள். நானும் எனது கணவரும் பின் தொடர்ந்து கோயம்புத்தூர் சென்றோம். அங்கு எனது மகள் வேலைக்கு சென்ற நிலையில் குழந்தையை எதிரிகள் வைத்திருந்தார்கள். எனது மகள் குழந்தையை எதிரிகளிடம் கொடுத்துவிட்டதால் மீண்டும் கணவருடன் எப்படி சேர்வதென்று மன அழுத்தத்தில் இருந்தார். அதனால் அவரிடம் அப்போது நான் எதுவும் கேட்கவில்லை. அங்கிருந்து எதிரிகள் குழந்தையுடன் போய்விட்டார்கள். அதனால் நான் எனது மகளை அழைத்துக்கொண்டு ஈரோடு ரயில் நிலையம் வந்து அங்கு பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டிருந்த எனது மகள் மற்றும் எதிரிகளுடைய பொருட்களை எடுத்து அவர்களுடைய விபரங்களை தெரிந்து கொண்டேன்.

எங்கள் வீட்டில் இருந்து குழந்தையுடன் சென்ற எனது மகள் எதிரிகளுடன் சேர்ந்துதான் மதுரை மாட்டுத்தாவனியில் இருந்து வேளாங்கண்ணி, நாகூர் பின்னர் ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய ஊர்களுக்கு சென்றுள்ளார் என்று சொன்னால் சரிதான். தூத்துக்குடியில் எதற்காக மீண்டும் புகார் கொடுத்தோம் என்றால், எனது மகளிடமிருந்து குழந்தையை எதிரிகள் பிடிங்கி சென்றுவிட்டதால் புகார் கொடுத்தோம். எனது மகளிடமிருந்து எதிரிகள் குழந்தையை பிடிங்கி சென்றதற்காக எனது மகள் ஏதாவது புகார் கொடுத்தாரா என்றால் அவர் அந்த சமயத்தில் தன்னறிவு இல்லாமல் இருந்ததால் புகார் கொடுக்கவில்லை.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் குழந்தை காணாமல் போனது சம்மந்தமாக நான் கொடுத்ததாக சொல்லப்படும் புகாருக்கான விபரங்களை எனது மகள்தான் சொன்னாரா என்றால் இல்லை, அவர் அந்த சமயத்தில் சென்னையில் இருந்தார். தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நான் கொடுத்த அதசாஆ.1றான புகார் மனுவில் எதிரிகள் குழந்தையை கடத்திவிட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். குழந்தையை இடைக்கால பொறுப்பில் பெருவதற்காக தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனு எண்.107/2017லில் நான் கடந்த 23.03.2017ம் தேதி மசா.2 டாக அளித்த சாட்சிய வாக்குமூலம்தான் தற்போது காட்டப்படும் **நீமசாஆ.2** என்று சொன்னால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் குழந்தை இன்றி வந்த எனது மகளிடம் நானும், எனது கணவரும் கேட்டபோது அவர் குழந்தை பாதுகாப்பாக உள்ளதாக என்னிடம் சொன்னார் என அளித்துள்ளேன் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.20 18:38:23 +0530

**Judicial Form No.53**
**(See Rule 42)**
**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE**
**NAGAPATTINAM.**
**C.C.01/2018 –** P.W.2

Deposition of witness for Prosecution:

| | |
|---|---|
| Name : திருமதி. சுகன்யா | Husband Name. ஜெரோம் |
| Village : தூத்துக்குடி | Age: 34 |
| Date : 20.08.2026 | தொழில் : வீட்டுக்குடித்தனம் |

நம்பர்: 9626071024

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of August 2026.**

Signature of Witness

**Tmt. S. Umamakeswari (Name of the Interpreter)**
Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th **day of August 2026.**

Signature of Interpreter

**( 1, 2ம் எதிரிகள் ஆஜரில்லை. அவர்களுக்காக அவர்களது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராக அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச.பிரிவு 317ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. )**

**சாட்சி மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பு மறு விசாரணை.**

வேளாங்கண்ணிக்கு வந்த நான் குழந்தையை எதிரிகளிடம் ஒப்படைத்துவிட்டு எவ்வளவு நாட்கள் கழித்து எனது அம்மா ஊருக்கு சென்றேன் என்றால் இரண்டு, மூன்று நாட்கள் கழித்து சென்றேன். அதன் பின்னிட்டு மீண்டும் எத்தனை நாட்கள்

கழித்து நான் வேளாங்கண்ணிக்கு வந்தேன் என்றால் நான் எனது அம்மா, அப்பா எல்லாம் வந்துவிட்டோம். அவ்வாறு வந்த நாங்கள் வேளாங்கண்ணி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோமா என்றால் ஆமாம். இந்த புகார் எல்லாம் கொடுத்ததாக சொல்வதற்கு முன்பாக நான், எனது கடத்தப்பட்டதாக சொல்லப்படும் குழந்தை, எதிரிகள் மற்றும் எனது தாயார் ஆகியோர்கள் எல்லாம் என்ன விசாரணைக்காக எங்களது தூத்துக்குடி மாவட்டம் புளியம்பட்டி அந்தோனியார் காவல் நிலையத்திற்கு சென்றிருந்தோம் என்றால் நான் குழந்தையுடன் எதிரிகளுடன் அங்கு இருந்ததால் எனது உறவினர்கள் எல்லாம் பார்த்து எதற்காக என்னுடன் அவர்கள் இருக்கிறார்கள் என சொல்லி கேட்டனர் மற்றும் எனது உறவினர்கள் என்னுடனும் எனது குழந்தையுடனும் அங்கு இருந்த எதிரி ஈஸ்வரனை பிடித்து அடித்தார்கள், அதனால் அங்கு கூடியிருந்த போலிசாரும் எதிரி ஈஸ்வரனை அடித்தார்கள், பின்னர் காவல் நிலையம் அழைத்து சென்றார்கள். அதன் பின்னர் எனது அம்மாவை வரவழைத்து விசாரித்து என்னையும் குழந்தையும் மட்டும் எனது அம்மாவுடன் எங்கள் வீட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டார்கள்.

அதன் பின்னிட்டு எதிரிகள் இருவரும் மதுரை மாட்டுத்தாவனிக்கு சென்றுவிட்டார்களா என்றால் ஆமாம் சென்றுவிட்டார்கள், ஆனால் அவ்வாறு சென்றவர்கள் சும்மா இருக்காமல் ஒருவார காலம் எனக்கு போன் செய்து தொந்தரவு செய்து குழந்தையுடன் வரும்படி சொன்னார்கள். அதனால் நான் குழந்தையை எடுத்துக்கொண்டு மதுரை மாட்டுத்தாவனியிடம் சென்று சேர்ந்துகொண்டேன். அவ்வாறு எதிரிகளுடன் சேர்ந்து கொண்டு நானும் குழந்தையும் மதுரை மாட்டுத்தாவனியில் இருந்து ஈரோட்டிற்கும் அங்கிருந்து கோயம்புத்தூருக்கும் சென்றோம். அங்குதான் எனது குழந்தையை எதிரிகள் தூக்கி சென்றுவிட்டார்கள். அந்த சமயத்தில் நான் போன் பார்த்துக்கொண்டிருந்தேன். பாத்ருமுக்கு அழைத்து செல்வதாக சொல்லி எனது குழந்தையை தூக்கி சென்றுவிட்டார்கள் என சொல்லி சாட்சி தன்னிச்சையாக சாட்சியம் அளிக்கிறார். கோயம்புத்தூரி வைத்துதான் குழந்தையை எதிரிகள் தூக்கி சென்றதாக சொல்லப்படும் நிலையில், அங்கு வைத்து

ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால், அங்கு வைத்தும் புகார் கொடுத்தோம். எங்கு புகார் கொடுத்தோம் என்றால் கோயம்புத்தூர் ரயில்வே ஸ்டேஷன் அருகே உள்ள காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம், எது என்று தற்போது சரியாக தெரியாது. இந்த விபரங்களை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவர்களும் அங்கு வந்து சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்தார்கள். அதன் பின்னர் வேளாங்கண்ணிக்கே அவர்கள் சென்றிருப்பார்கள் என நினைத்துதான் பின்னர் வேளாங்கண்ணி வந்தோம்.

முதன் முதலில் நான் எனது குழந்தையுடன் மதுரை வாடிப்பட்டியில் உள்ள மாதாக்கோவிலில் வைத்துதான் எதிரிகளை பார்த்தேன். அங்கிருந்துதான் அவர்கள் என்னையும் குழந்தையையும் வேலை வாங்கி தருவதாக சொல்லி வேளாங்கண்ணிக்கு அழைத்து சென்றார்கள். அதன் பின்னர் நான், எனது குழந்தை எதிரிகள் மேரி, திவ்யா ஆகியோர்கள் எல்லாம் சேர்ந்து எங்கள் ஊரான தூத்துக்குடி, புளிம்பட்டியில் உள்ள அந்தோனியார் கோவிலுக்கு சென்றோம் அப்போதுதான் அங்கு மேற்படி பிரச்சனை ஏற்பட்டது. அதன் பின்னர் ஒருவாரம் கழித்து மீண்டும் நான் எனது குழந்தையுடன் மதுரை மாட்டுத்தாவனிக்கு சென்று அங்கிருந்த எதிரிகள், மேரி மற்றும் திவ்யா ஆகியேருடன் ஈரோடுக்கு சென்று அங்கு ரயில்வே ஸ்டேஷனில் பெட்டக பாதுகாப்பு அறையில் எங்களது பேக்குகளை வைத்துவிட்டு அங்கிருந்து கோயம்புத்தூர் சென்றோம். அன்று மறுநாள் விடியற்காலையிலேயே குழந்தையை எதிரிகள் தூக்கி சென்றுவிட்டார்கள். அதன் பின்னர் நான் குழந்தையை தேடினேன் என சாட்சி அவராகவே சாட்சியம் அளிக்கிறார்.

குழந்தை எதிரிகள் கோயம்புத்தூரில் இருந்து கடத்தி சென்றார்களா ? அல்லது வேளாங்கண்ணியில் இருந்து கடத்தி சென்றார்களா என்றால் கோயம்புத்தூரில் இருந்துதான் கடத்தி சென்றார்கள். குழந்தையை எதிரிகள் கடத்தி சென்றதாக நான் அளிக்கும் சாட்சியம் தவறு என்றும், நானே குழந்தையை வளர்க்க சொல்லி எதிரிகளிடம் கொடுத்துவிட்டு எதிரிகளுடனேயே அனைத்து இடங்களிலும் சென்றுள்ளேன் என்றும், பின்னிட்டு எங்கள் வீட்டில் பிரச்சனை செய்ததால் எதிரிகள்

குழந்தையை கடத்திவிட்டதுபோல தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு இருப்பது ஒரு குழந்தை, அவர்களே அவர்கள் குழந்தையை வளர்க்காமல் விட்டுவிட்ட நிலையில், நான் அவர்களிடம் எதற்காக எனது ஒரு குழந்தை வளர்க்க கொடுக்க வேண்டும் என சாட்சி எதிர் வினா வினாவுகின்றார். நானும் எனது கணவரும் காதல் திருமணம் தானே என்றால் ஆமாம். எனது கணவருக்கும் எனக்கும் ஏற்பட்ட சண்டையின் காரணமாகத்தான் நான் குழந்தையுடன் வீட்டைவிட்டு சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கும் எனது அப்பாவிற்கும்தான் பிரச்சனை.

எனது அப்பாவீட்டில் பிரச்சனை ஏற்பட்டதாக சொல்லப்படும் நிலையில், நான் எனது கணவர் வீட்டிற்கு செல்லாமல் குழந்தையுடன் தனியாக மதுரை வாடிப்பட்டி மாதாகோவிலிடம் வந்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது கணவர் வெளிநாட்டில் இருந்ததால் நான் வந்தேன். சுரேஷ் என்பர் எனது நண்பரா என்றால் இல்லை அவர் எனது அண்ணன். நான் அவருடன்தான் வாடிப்பட்டியில் இருந்து குழந்தையை தூக்கி செல்வதாக சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. எனது குழந்தைக்கு எதிரிகள்தான் ஜெயஸ்ரீ என பெயர் வைத்தார்கள் என்று சொன்னால் அந்த பெயரை வைத்து ஒருநாள்கூட அழைத்ததில்லை. அந்த குழந்தை பிறப்பதற்கு முன்பே எனது கணவர் பெண் குழந்தையின் பெயரில் உள்ள பாசத்தினால் பிறக்கபோகும் குழந்தை பெண் என நினைத்து ஸ்னோபியா என பெயர் வைத்துவிட்டார். நான் சொல்லக்கூடிய விபரம் தவறும் என்றும், எனக்கு பெண் குழந்தை பிறந்ததால்தான் எனக்கும், எனது கணவருக்கும் பிரச்சனையே ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

போலிசார் என்னை விசாரணை செய்தபோது நான் கொடுத்த வாக்குமூலத்தில் எனக்கு பெண் குழந்தை பிறந்த 3 நாளில் எனக்கும் எனது கணவருக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து சென்றதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அதுபோல எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்படவில்லை. வேளாங்கண்ணி காவல்

நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பாக எதிரிகளையும் குழந்தையும் தேடிக்கொண்டு எதிரி விஜயலெட்சுமி அக்காவுடன் தேனிக்கு நான், எனது அப்பா, அம்மாவுடன் சென்றோம். சுரேஷ் என்பவர் எனது அண்ணன் இல்லை என்றும், அவர் எனது ஆண் நண்பர்தான் என்று சொன்னால் சரியல்ல. நான் வாடிப்பட்டியில் இருக்கும் பொழுது சுரேஷ் என்ற எனது ஆண் நண்பர் அழைத்தன் அடிப்படையில் அருடன் செல்ல வேண்டிதான் நானாகவே எனது குழந்தையை எதிரிகளிடம் வளர்க்க கொடுத்தேன் என்று சொன்னால் சரியல்ல. பின்னிட்டு குழந்தையை எனது கணவர் கேட்டதால் உண்மையை மறைத்து எதிரிகள் குழந்தையை கடத்திவிட்டதாக தவறான புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.08.20 18:38:39
+0530